# கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாயத் தொழில்நுட்ப கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து விவசாயத் தொழில்நுட்ப கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்திற்குச் சொந்தமான காணிகளை மதிப்பிட்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக 2011 ஆம் ஆண்டிற்கான கட்டிட மேம்படுத்தல் செலவினம் ரூபா 8,935,413 மாத்திரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் ஆற்றிய வேலைகள் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) விவசாயத் தொழில்நுட்ப கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனைப் பரிசோதிப்பதற்குத் தேவையான பேரேட்டுக் கணக்குகளும் தொடர்புடைய எவ்விதச் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 20,104,311 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகளை உள்ளடக்கி 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரைபு அறிக்கை வழங்கப்பட்டது. அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு 2012 நவம்பர் 30 ஆந் திகதி என்னுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் அந்த நிதிக்கூற்றுக்கள் விலக்கிக் கொள்ளப்பட்டு ரூபா 16,247,592 கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்ட திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் ரூபா 3,856,719 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் மேலும்

வெளிப்பட்டமையால் பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளிற்கு அப்பால் மேலும் இவ்வாறான குறைபாடுகள் காணப்படுதலை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

### 1.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உற்பத்திக் கணக்கின் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மூலப்பொருள் இருப்புக்களின் பெறுமதிகள் முறையே ரூபா 1,415,352 மற்றும் ரூபா 1,337,932 ஆக காணப்படினும் மெய்மையாய்வு அறிக்கையின் படி மீதிகள் முறையே ரூபா 1,428,170 மற்றும் ரூபா 1,205,808 ஆக காணப்பட்டமையால் வேறுபாடுகள் முறையே ரூபா 12,818 மற்றும் ரூபா 132,124 ஆகும்.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன..

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் XIII ஆம் பகுதியின் 99 ஆம் பிரிவு மற்றும் 2008 ஒக்தோபர் 16 ஆந் திகதிய விவசாயத் தொழில்நுட்ப கிராமிய விஞ்ஞான நிறுவக கட்டளைகளின் 24 ஆம் பிரிவு | விஞ்ஞான நிறுவகத்தினால் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமாயினும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 371 | 2011 ஆம் ஆண்டில் செவனகல சீனித் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 228,275 முற்பணத் தொகை 2013 மார்ச் 30 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 5,027,563 பற்றாக்குறையொன்றானதுடன் மீண்டெழும் மற்றும் பேணுகைச் செலவினத்திற்கான ரூபா 7,000,000 அரசாங்க மானியத்தினைக் கருத்திற்கொண்ட பின்னர் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 1,972,439 மிகையாக மாறியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

-------------------------------------------------

நிறுவனத்தினை தோற்றுவிக்கையில் தென் மாகாண காணிகள் ஆணையாளரிடமிருந்து நீண்டகால குத்தகையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டு தற்போது நிறுவனம் இயங்கிவரும் காணி கட்டிடங்களிற்கான குறித்த வாடகைத் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அச் சொத்துக்களை சட்டரீதியாக நிறுவனத்திற்கு கையேற்பதற்கு 2012 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 நிதிகளின் அரைகுறைப் பயன்பாடு மற்றும் வரவு மீதிகள்

--------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் இரண்டு ஆய்வுகளிற்காக நிறுவகத்திற்குக் கிடைத்திருந்த ரூபா 2,621,603 தொகையான மானியங்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது பல வருடங்களாக பயன்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) தேசிய நேரிணைப்பு தொலைநோக்கு கல்விச் சேவையுடன் (NAC) தொடர்புடைய செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ஏற்பாட்டினை மீறி ரூபா 100,925 செலவிடப்பட்டிருந்தது.

## 4. கணக்களித்தன்மை மற்றும் நல்லாட்சி

---

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் படி நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருக்கையிலும் 2008 இன் அரையாண்டு, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் 2013 பெப்ரவரி 26 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்துவதற்கும் வழிகாட்டலிற்கு இயலுமான வகையிலும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2011 ஆம் ஆண்டில் அடைவதற்கு / நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் மற்றும் இலக்குகள் எவையென்றும் அவற்றின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்தினை கணக்காய்வில் பரிசோதிக்க முடியவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

---

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் இந்த நிறுவகத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4.1 இன் பிரகாரம் நிறுவகத்திற்காக கணக்காய்வுக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 கொள்வனவுத் திட்டம்

அரசாங்க முயற்சிகளிற்கான வழிகாட்டல்கள் கோவையின் படி நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்கான பாதீடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் பாதீடானது பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தமையினை கணக்காய்வில் பரிசோதிக்க முடியவில்லை.

## 4.7 வரைபு ஆண்டறிக்கை

அரசாங்க முயற்சிகளிற்கான வழிகாட்டல்கள் கோவையின் 6.5.1 ஆம் பந்தியின் படி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) முற்பணங்கள்

(ஆ) கணக்கு வைத்தல்

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) பொருட் பதிவேட்டினைப் பேணுதல்

(உ) உள்ளகக் கணக்காய்வு